# திராவிடத்தால் வாழ்கிறோம்

1166

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

56

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.






# மொழி இன உணர்வூட்டிய 'தூக்குமேடை'

'தூக்குமேடை' நாடகம், இந்தியா விடுதலை அடைந்த மூன்றே மாதங்களில் கலைஞர் அவர்களால் எழுதப்பட்டு, 1947, நவம்பர் 19-ஆம் நாள் அரங்கேற்றப்பட்டிருக்கிறது. இந்நாடகம் அன்று மிகப் பெரிய அளவில் வரவேற்பையும் பெற்றிருக்கிறது. அந்த நாடகத்தைத்தான் 35 ஆண்டுகளுக்குப் பிறகு, திரைப்படமாக எடுப்பதற்காகத் திரைக்கதை, வசனத்தை கலைஞர் எழுதியிருக்கிறார்.

1947-இல் 'தூக்குமேடை' நாடகத்தைப் போலவே, 1982-இல் வந்த 'தூக்குமேடை' திரைப்படமும் ஆதிக்க எண்ணம் கொண்டவர்களைத் தொந்தரவு செய்தது. தமிழ் மொழி உணர்வு, வடமொழி எதிர்ப்பு, மூடநம்பிக்கை எதிர்ப்பு, விவசாயத் தொழிலாளர் உரிமை, ஆணாதிக்க எதிர்ப்பு எனப் பல குரல்களை எழுப்பியது.

உதாரணமாக, படத்தின் தொடக்கக் காட்சியில் அபிநயசுந்தரம் (எஸ்.எஸ்.சந்திரன்) காளி கோயிலில் சாமி கும்பிடுகிறார். அவருடன் அவரது கல்லூரியின் தமிழ் பண்டிட் பரமாச்சாரியும் (கே.கண்ணன்) அவரின் மாணவன் அர்த்தநாரியும் சாமி கும்பிடுகின்றனர். அவர்களுக்கு எதிர் வரிசையில் அபிநய சுந்தரத்தின் கார் டிரைவர் முனியன் (சாமிக்கண்ணு) அவரின் மகள் முத்தம்மாவுடன் நின்று சாமி கும்பிடுகிறார். அப்போது...

**அபிநய சுந்தரம்:** ஓம் காளி... ஓம் காளி அம்மா... பரமாச்சாரியாரே, இன்னைக்கு காளி தேவியின் அலங்காரம் கண்கொள்ளாக் காட்சியாயில்ல.

**தமிழ் பண்டிட் :** அதுக்கென்ன இந்த அபிநய சுந்தரம் அறங்காவலர் குழுத் தலைவரா இருக்கிறவரையிலும் அம்பாளுக்கு என்ன குறை. டேய் அர்த்தநாரி, நான் சொல்றது சரிதானடா?

**அர்த்தநாரி:** சதத்துக்கு சதம் சரிதான். சென் பிரசன்ட் சரி.

**முனியன்:** அது என்ன சதத்துக்கு சதம்? சென் பிரசன்ட்? ஏன் நூத்துக்கு நூறுன்னு சொன்னா என்னா?

**தமிழ் பண்டிட் :** டேய் முனியா, நீ அய்யா வீட்டுல ஆஃப்ட்ரால் டிரைவர் வேலைக்காரன். நான் அய்யாவோட காலேஜ்ல தமிழ் பண்டிட். இவன் என் அபஃக்சனேட் ஸ்டூடன்ட் அர்த்தநாரி. சமஸ்கிருதத்துல குட்டி டைகர். எனக்கில்லா அக்கறை தமிழ் மேல உனக்கென்னடா?

**முனியன் :** நான் தமிழன்ங்க அவ்வளவுதான்.

**பண்டிட்:** அப்ப நாங்க மட்டும் யாரு?

**முனியன்:** நீங்களும் தமிழனா இருங்கன்னு சொல்றேன் அவ்வளவுதான்... என்று சொல்கிறான்.

இக்காட்சியின் மூலம் கலைஞர் பார்ப்பனர்களின் சமஸ்கிருதப் பற்றையும் தமிழ் விரோதப் போக்கையும் அம்பலப்படுத்துகிறார்.

அபிநய சுந்தரத்தின் அடியாட்கள் குடிசைகளைப் பிய்த்து எரியும் ஒரு காட்சியில்...

**ஒரு பெண் :** அய்யா... அய்யா... மிஞ்சியிருக்குறது இந்த ஒரு இடந்தாய்யா இதையும் பிரிச்சுட்டா நாங்க எங்கய்யா போவோம்?

**அடியாள் :** எங்கயாச்சும் போய்த் தொலைங்க. இது அய்யா அபிநய சுந்தரத்தோட ஆணை. உடனே காலி பண்ணியாகணும்னு கட்டளை.



அப்போது, பாண்டியனும் அவன் நண்பர்களும் அங்கு வந்து வாதம் செய்கின்றனர். அப்போது போதையில் தள்ளாடியபடி கந்தன் (சந்திரசேகர்) அங்கு வருகிறான்...

**கந்தன் :** ஆகா... அப்படிச் சொல்லு. அய்யா அபிநயசுந்தரம் போற வழி அழகா இருக்க வேண்டாமா? ஏய்யா... அய்யா வர்ற வழியை நீங்கதான் அலங்காரம் பண்ணி வச்சா என்ன? வீட்டுக்கு வீடு தோரணம் கட்டுங்க. தோரணம் கட்ட என்ன இருக்குன்னு கேக்குறீங்களா? உங்க வயித்தக் கிழிச்சு கொடல எடுத்து வீட்டுக்கு வீடு தோரணம் தொங்க விடுங்க. பொம்பளைங்களா, உங்க உடம்புல சேலை, ரவிக்கை இல்லாட்டியும் பரவாயில்ல. அதோ அந்த மாடிவீட்டுத் தோட்டத்துல கெடக்கு பாருங்க, எச்சில் இலைங்க, அதை உங்க பிள்ளைகள விட்டு நக்கிச் சுத்தம் பண்ணச் சொல்லி, அந்த இலைகள நீங்க கட்டிக்கிட்டு அய்யா இந்தப் பக்கம் போகும்போதும் வரும்போதும் டாட்டா காட்டுங்க டாட்டா. என்ன பாண்டியா நான் சொல்றது சரிதானா?

**பாண்டியன்:** கந்தா, நீ இந்தச் சமுதாயச் சீர்கேட்டை இடிக்காம எடுத்துக்காட்டிட்ட. ஆனால், நீ மாத்திரம் குடிக்காம இருந்தா...

**கந்தன் :** இப்படி வெடிக்காது பாண்டியா, விவேகமான கருத்துகள்!

### அண்ணாதுரைதான் வரணும்

அதே போல கல்லூரி மாணவர் பாண்டியன், தமிழ் பண்டிட் உரையாடும் காட்சியில் மூடநம்பிக்கையை, சாடுவதைப் பார்க்கலாம்.

**தமிழ் பண்டிட் :** ராகு-கேது என்ற பாம்புகள் சந்திரனை விழுங்குவதால்தான் கிரகணம் ஏற்படுகிறது.

**பாண்டியன் :** ஒரு சந்தேகம்!

**தமிழ் பண்டிட் :** என்ன சந்தேகம்?

**பாண்டியன்:** இப்போதுதான் இதே வகுப்பில் அறிவுத்துறை ஆசிரியர் சொன்னார். சூரியன்-சந்திரன்-பூமி மூன்றும் ஒரே நேர் கோட்டில் வரும்போது கிரகணம் ஏற்படும் என்று. தமிழ்த் துறை ஆசிரியர் நீங்கள் சொல்கிறீர்கள், ராகு-கேது என்ற பாம்புகள் விழுங்குவதாக. நாங்கள் இதில் எதை நம்புவது?

**தமிழ் பண்டிட் :** அறிவுத்துறை பரீட்சை வைக்கும்போது அதை எழுது. தமிழ்த் துறை பரீட்சை வைக்கும்போது இதை எழுது.

**பாண்டியன் :** அப்படி என்றால் அறிவுத் துறையும் தமிழ்த் துறையும் ஒன்று சேராதா?

**தமிழ் பண்டிட் :** அறிவுத் துறையும் தமிழ்த் துறையும் ஒண்ணா சேரணும்னா, உங்க அண்ணாதுரையைதான் தமிழ் பண்டிதராப் போடணும்.

**பாண்டியன்:** உண்மை! உண்மையைச் சொன்னீர்கள். மறைந்தும் மறையாமலும் இருக்கிற அறிஞர் அண்ணாதான் அறிவுத் துறையையும் தமிழ்த் துறையையும் ஒன்றாக ஆக்கியவர். பண்டிதர் போற்றும் பண்டிதர். புலவர் போற்றும் புலவர். அறிஞர் போற்றும் அறிஞர். மாணவர்கள் கை தட்டுகின்றனர்.

காரிருள் அகன்றிட

அடுத்த காட்சி...

பாசறையில் சேர்ந்து அரசியல் கற்ற கந்தன் பெரியார் போன்று மாறுவேடமிட்டு விவசாயத் தொழிலாளர் மத்தியில் உரையாற்றுகிறான்...

**கந்தன்:** கிழக்கிலே முளைத்த கதிர் மேற்கிலே சாயும் வரை உழைப்பிலே களைப்பின்றி ஓடாகத் தேய்பவனே! நீயின்றி இந்த உலகில்லை என்ற உண்மையை நெத்தி வியர்வையால் நிலத்திலே எழுதிக்காட்டிய உழவர் பெருங்கூட்டமே. வயல்களுக்குப் பச்சைப் பட்டாடை உடுத்திக் காட்டுகிறாய் நீ. ஆனால், இன்று நீ பெற்றெடுத்த வண்ணக் கிளிகளுக்குப் பஞ்சு நூலாடையுமின்றி பரிதவிக்கிறாயே நியாயம்தானா? நீ விடும் மூச்செல்லாம் நெல் மணிகள். நிலப்பிரபுவின் களஞ்சியத்தில் உருமாறும் பொன்மணிகள். ஆலைகளை ஓட்டுவது நீ விளைவித்த கரும்பு. அந்த ஆலை அரசனுக்கோ கேவலம், நீ ஒரு துரும்பு. இந்த அவல நிலை ஏன்?

உழைக்க ஒரு கூட்டம் செல்வத்தில் திளைக்கவொரு கூட்டமா?

வெள்ளாடுகளின் கொம்புகள் கூர்மையாகிவிட்டால், வேங்கைகளின் பற்களையும் நொறுக்கி எறிய முடியும். அந்தச் சிக்கனமான புரட்சியை விதைப்பதற்கு இந்த மண்ணில் பக்குவப்படுத்துவோம். விவசாயத் தொழிலாளிக்கு நியாயமாகச் சேரவேண்டிய கூலியைத் தருகிறாயா இல்லையா என்று கேட்போம்.

**தொழிலாளி:** அய்யா கூலி உயர்வு கேட்டோம்னு எங்களை வேலையை விட்டே விரட்டிட்டாரு படுபாவி அபிநய சுந்தரம்.

**கந்தன்:** அவன் யார் விரட்ட? இந்த நிலத்திலே பிறந்தானே தவிர, இந்த நிலத்தோடு பிறக்கவில்லையே! உதயத்தில் கிளம்பி உழுபவனுக்கு நிலம் சொந்தமே தவிர, உல்லாச பஞ்சணையை விட்டு ஒன்பது மணிக்கு எழுபவனுக்கா சொந்தம்? இல்லை... இல்லை... வாருங்கள் என்னோடு, உங்களைக் கட்டியுள்ள காரிருள் அகன்றிட இந்தக் கதிரவனைப் பின் தொடர்ந்து வாருங்கள்" என்று சொல்லி, கருப்பு சிவப்புக் கொடியேந்தி, ஊர்வலமாக மக்களை அழைத்துச்சென்று பம்பு செட்டுகளையும், ஆடு மாடுகளையும், பாத்திரம் பண்டங்களையும், நெல் மூட்டைகளையும் கைப்பற்றி விவசாயிகளிடம் ஒப்படைக்கிறான்.

இவ்வாறு கலைஞரின் 'தூக்குமேடை' திரைப்படம் பகுத்தறிவும் மொழி - இன உணர்வும் பரப்பியதுடன் ஒரு விவசாயப் புரட்சியைத் திரையில் வடித்துக்காட்டிய புரட்சிக் காவியமாகவும் திகழ்கிறது.

...காட்சி விரியும்

## மழலைகளும் வரலாறு கற்கட்டும்!

திராவிட இயக்க எழுத்துகளையும் சிந்தனைகளையும் ஆவணப்படுத்துவதோடு, அவற்றைப் பிற மொழிகளுக்குக் கொண்டு செல்லவும், அதன் வழியாக அறிவுத்தளத்தில் விவாதங்களை முன்னெடுக்கவும் வேண்டி தொடங்கப்பட்ட அமைப்பு, சென்டர் ஃபார் இந்தியன் சோஷியல் ஸ்டடீஸ் (Centre for Indian Social Studies–CISS). அந்த முயற்சியில், 100 புத்தகங்களை ஆங்கிலத்தில் கொண்டுவரத் திட்டமிட்டு, சென்ற ஆண்டில் 5 தமிழ் நூல்களை, ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது. பல்வேறு நூல்கள் மொழிபெயர்ப்புப் பணியில் உள்ளன. இந்த CISS அமைப்பின் புதிய முயற்சியாக CISS Juniors – Comics for Kids என்ற பெயரில், படக்கதை நூல்களை உருவாக்கியுள்ளது.




முதற்கட்டமாக, சமூக நீதி எழுத்தாளர் சு.விஜயபாஸ்கர் அறக்கட்டளையுடன் இணைந்து The Guy who Asked 'Why?', Our Brother Anna, The Tale of Gurukulam என்ற 3 தலைப்புகளில் ஆங்கிலத்திலும், அதே நூல்களை 'ஏன்? என்று கேட்கச் சொன்னவர்', 'தமிழ்நாடு தந்த அண்ணா', 'ஒரு குருகுலத்தின் கதை' என்ற தலைப்புகளில் தமிழிலும் உருவாக்கி உள்ளனர். இன்று (12.4.2026) நடைபெறும் சு.விஜயபாஸ்கரின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியில், இந்த நூல்கள் வெளியிடப்படவுள்ளன. திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் வெளியிட, தி.மு.கழகத்தின் தாம்பரம் நகராட்சி மண்டல குழுத்தலைவர் வே.கருணாநிதி, 'புதிய சிந்தனையாளன்' ஆசிரியர் வாலாசா வல்லவன் ஆகியோர் பெற்றுக்கொள்கிறார்கள். சென்னை, கலைஞர் கருணாநிதி நகர், கலப்பை பதிப்பகம் அரங்கில், மாலை 4 மணி அளவில் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. நூல்களைப் பெற 84284 55455 இந்த எண்ணுக்கு அழைக்கலாம். periyarbooks.com இணையதளம் வழியாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவருக்குப் பொன்னாடை!



பொன்.வரதராஜன்

1993-ஆம் ஆண்டு, கோவையில் நடைபெற்ற இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாட்டுக்கு முன்னர், இளைஞர் அணி சார்பில், நடைபெற்ற பொதுக்கூட்டத்துக்கு வருகைதந்த அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்களை வரவேற்று, மேடையில் பொன்னாடை அளித்தேன். மேடையில், மாநகர் மாவட்டச் செயலாளர் அண்ணன் கா.ரா.சுப்பையன் அவர்கள் இருக்கிறார். இன்றும் அதே உணர்வுடன் களப்பணியில் ஈடுபட்டு வருவதுதான் எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

- பொன்.வரதராஜன்,
48-வது வார்டு துணைச் செயலாளர்,
பீளமேடு பகுதி, சிங்காநல்லூர் தொகுதி,
சித்தாபுதூர், கோயமுத்தூர்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### தேர்தலில் நிற்பதற்கு வாக்கெடுப்பு!

1956-ஆம் ஆண்டு, மே மாதம் 17-20ஆம் தேதி நடைபெற்ற கழகத்தின் இரண்டாவது மாநில மாநாட்டில், கழகம் தேர்தலில் நிற்பது குறித்து வாக்கெடுப்பு நடத்தப் பட்டது. அதற்கு முன்னர் மே 3-ஆம் தேதி, 'நம்நாடு' இதழில் வாக்கெடுப்பு நடத்தப்போவது குறித்தும், மாதிரி வாக்குச்சீட்டையும், வாக்களிப்பு முறையினையும் செய்தியாக வெளியிட்டது தலைமைக் கழகம்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900